# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2070/12 - 2018 මැයි මස 03 වැනි බදාදා - 2018.05.09

*2070/12 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு மே மாதம் 09 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

### 2016 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை நியதிச் சட்டம்

2016 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க, வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை நியதிச் சட்டத்தின் 62 ஆம் பிரிவின் கீழ், வடமாகாண முதலமைச்சரும் நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணி, மின்சக்தி, வீடமைப்பும் நிர்மாணமும், சுற்றுலா, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி, மோட்டார் போக்குவரத்து மற்றும் போக்குவரத்து அமைச்சரினால் திருத்தி அமைக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்,
முதலமைச்சரும், நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும்,
காணி, மின்சக்தி, வீடமைப்பும் நிர்மாணமும், சுற்றுலா,
உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், கிராம அபிவிருத்தி,
வீதி அபிவிருத்தி, மோட்டார் போக்குவரத்து மற்றும்
போக்குவரத்து அமைச்சர்,
வடக்கு மாகாண சபை.

வடக்கு மாகாண சபை,
ஏ9 வீதி, கைதடி, யாழ்ப்பாணம்.

ஒழுங்குவிதிகள்

2017 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆந் திகதியும் 2019/5 ஆம் இலக்கமும் கொண்ட அதிவிசேட வர்த்தமானப் பத்திரிக்கையில் பிரசுரிக்கப்பட்ட வடமாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து ஒழுங்குவிதிகள் 2018.02.01 ஆந் திகதியிலிருந்து செயற்படும் வண்ணம் பின்வருமாறு திருத்தி அமைக்கப்படுகின்றது.

1. அதன் 3 ஆம் ஒழுங்கு விதிக்கு அமைவாக உள்ள அட்டவணை II இற்குப் பதிலாக பின்வரும் அட்டவணை II ஐ இடுவதன் மூலம்,



*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## அட்டவணை II

அதிகாரசபையால் நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டணங்கள்

இவ்வட்டவணையின் I ஆவது நிரலில் காட்டப்பட்டுள்ள ஏதேனும் தொழிற்பாட்டுக்காகச் செலுத்தப்பட வேண்டிய கட்டணங்கள், இவ்வட்டவணையில் II ஆவது நிரலில் நேரொத்த பதிவில் காட்டப்பட்டுள்ள கட்டணத் தொகைகளாதல் வேண்டும்.

| | *நிரல் I* | *நிரல் II* |
|---|---|---|
| | **செலுத்தவேண்டிய கட்டணத்தொகை** | **ரூ.ச.** |
| 1. | அனுமதிப்பத்திரம் ஒன்றுக்கான விண்ணப்பக் கட்டணம் | 1,000.00 |
| 2. | தற்காலிக அனுமதிப்பத்திரத்தை நிரந்தரமாக்குதல் | |
| i. | 1கி.மீ தொடக்கம் 25கி.மீ வரை | 50,000.00 |
| ii. | 26கி.மீ தொடக்கம் 50கி.மீ வரை | 75,000.00 |
| iii. | 51கி.மீ தொடக்கம் 75கி.மீ வரை | 100,000.00 |
| iv. | 76கி.மீ தொடக்கம் 100கி.மீ வரை | 125,000.00 |
| v. | 101கி.மீற்றருக்கு மேற்பட | 150,000.00 |
| 3. | புதிதாக அனுமதிப்பத்திரம் வழங்கல் - அதிகாரசபையின் கேள்விப் பத்திரமுறைக்கமைவாக. | |
| 4. | பயணிகள் சேவை அனுமதிப்பத்திரம் புதுப்பித்தல் கட்டணம் | |
| i. | புதுப்பித்தல் கட்டணம் (உரிய திகதிக்குள்) | 7,500.00 |
| ii. | புதுப்பித்தல் கட்டணம் (முடிவடைந்த திகதியிலிருந்து 7 நாட்களுக்குள்) | 10,500.00 |
| iii. | புதுப்பித்தல் கட்டணம் (முடிவடைந்த திகதியிலிருந்து 7 நாட்களுக்குப் பின்னரும் ஒரு மாதத்திற்குள்ளும்) | 12,500.00 |
| iv. | புதுப்பித்தல் கட்டணம் (முடிவடைந்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்கு பின்னரும் இரண்டு மாதத்திற்குள்ளும்) | 17,500.00 |
| v. | புதுப்பித்தல் கட்டணம் (முடிவடைந்த திகதியிலிருந்து இரண்டு மாதத்திற்கு பின்னரும் மூன்று மாதத்திற்குள்ளும்) | 22,500.00 |
| vi. | புதுப்பித்தல் கட்டணம் (முடிவடைந்த திகதியிலிருந்து மூன்று மாதத்திற்கு பின்னரும் ஆறு மாதம் வரையும்) ஒவ்வொரு மாதத்திற்கும் ரூபா.5,000.00 வீதப்படி | |
| 5. | பயணிகள் சேவை அனுமதிப்பத்திரப் பிரதி பெறல் (சேதமடைந்தால்) | 2,500.00 |
| 6. | பயணிகள் சேவை அனுமதிப்பத்திரப் பிரதி பெறல் (தொலைந்தால் / காணாமல்போனால்) | 5,000.00 |
| 7. | பயணிகள் சேவை அனுமதிப்பத்திரக் காற்றுத்தடை கண்ணாடிச்சிட்டை பிரதி பெறல் (சேதமடைந்தால்) | 2,000.0 |
| 8. | பயணிகள் சேவை அனுமதிப்பத்திரக் காற்றுத்தடை கண்ணாடிச்சிட்டை பிரதி பெறல் (தொலைந்தால் / காணாமல்போனால்) | 2,500.00 |
| 9. | விசேட சுற்றுலா அனுமதிப்பத்திரம் - ஒரு நாளைக்கு | 200.00 |
| 10. | தற்காலிக அனுமதிப்பத்திரம் - ஒரு நாளைக்கு | 200.00 |

**அட்டவணை II** (தொடர்ச்சி)

| | *நிரல் I* | *நிரல் II* |
|---|---|---|
| | **செலுத்தவேண்டிய கட்டணத்தொகை** | **ரூ.ச.** |
| 11. | வழி அனுமதிப்பத்திரத்தின் உரிமை மாற்றம் | 100,000.00 |
| 12. | அனுமதிப்பத்திரம் உடைய ஒருவர் இறந்துபோனால் சட்டபூர்வமான பின்னுரித்தாளருக்கு (மனைவி அல்லது கணவன் அல்லது பிள்ளைகள்) அவ்வனுமதிப்பத்திரத்தைக் கைமாற்றுதல் | இல்லை |
| 13. | அனுமதிப்பத்திரத்தை குடும்ப அங்கத்தவருக்குள் கைமாற்றம் செய்தல் (மனைவி அல்லது கணவன் அல்லது பிள்ளைகள்) | 50,000.00 |
| 14. | பேருந்து ஒன்றில் நேரசூசி இணைப்பிரதியை விநியோகித்தல் | 100.00 |
| 15. | சொந்தக்காரர்களின் வேண்டுகோளின் பேரில் நேரசூசி திருத்தப்படுவதற்கு (அதிகாரசபை இணங்கும் போது) பேருந்து ஒன்றுக்கு | 250.00 |
| 16. | மேலதிக கட்டணக் குறிப்பு விநியோகித்தல் | 50.00 |
| 17. | பேருந்து மாற்றக்கட்டணம் | 10,000.00 |
| 18. | வழி மாற்றக்கட்டணம் | 25,000.00 |
| 19. | மாதாந்த ஓட்டுதல் குறிப்புத்தாள் வழங்கல் (மாகாணத்துக்குள்) | 750.00 |
| 20. | பிரவேசக் கட்டணப்பத்திரம் வழங்கல் (மாகாணங்களுக்கிடையில்) | 1,500.00 |
| 21. | மாதாந்த ஓட்டுதல் குறிப்புத்தாள் பெற்றுக்கொள்வதற்கு தாமதித்தல் (மாதம் ஒன்றுக்கு 30% மிகையாக செலுத்துதல் வேண்டும்) | |
| 22. | அதிகாரசபை பேருந்தைப் பரிசோதனை செய்தல் | 2,000.00 |
| 23. | அனுமதிப்பத்திர புத்தகத்தில் திருத்தம் செய்தல் | 1,000.00 |
| 24. | சாரதி, நடாத்துநர் தொழில் அனுமதிப்பத்திரம் பெறல் | 2,500.00 |

2. இவ் ஒழுங்குவிதியின் 20 ஆவது பந்தி நீக்கப்பட்டு 20(1) மற்றும் 20(2) ஆகிய புதிய பந்திகள் இடுவதன் மூலம்,

20.1 இதனகத்து தரப்பட்டுள்ள அட்டவணை V இல் குறிப்பிட்டுள்ள உறுதிப்படுத்தப்படும் குற்றங்களை மீறுகின்ற எவரேனுமாள் அவற்றுக்கு ஏதிராக காட்டப்பட்டுள்ள தண்டங்களுக்கு ஆளாதல் வேண்டும்.

20.2 20.1 இல் குறிப்பிடப்படாத அதாவது அட்டவணை V இல் குறிப்பிடப்படாத ஏனைய இவ்வொழுங்குவிதிகளின் ஏற்பாடுகளை மீறுகின்ற ஏவரேனுமாள் தவறொன்றை புரிகின்றார் என்பதுடன், நீதவானொருவர் முன்னரான சுருக்கவிளக்கத்தின் பின்னர் குற்றத் தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் பத்தாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு அல்லது இரண்டாண்டுகளை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

3. பின்வரும் புதிய அட்டவணை V இனை சேர்ப்பதன் மூலம்,

## அட்டவணை - V

| இல. | குற்ற விபரம் | 1ஆம் தடவை | 2ஆம் தடவை | 3ஆம் தடவை | 4ஆம் தடவை | 5ஆம் தடவை |
|---|---|---|---|---|---|---|
| 1 | வரையறையற்ற பயணிகள் காப்புறுதிப்பத்திரம் இல்லாது சேவையாற்றுதல் | பயணிகள் சேவை அனுமதிப்பத்திரத்தை இரத்து செய்தல் | | | | |
| 2 | காலாவதியான (ஒரு மாதத்திற்கு மேல்) வழி அனுமதிப் பத்திரத்துடன் சேவையாற்றுதல். | எச்சரிக்கை செய்யப்படுவதுடன் ரூபா. 2,500.00 தண்டப்பணம் செலுத்தப்பட வேண்டும் | பயணிகள் சேவை அனுமதிப் பத்திரத்தை இரத்து செய்தல் | | | |
| 3 | அதி கூடிய கட்டணம் அறவிடுதல் | | | | | |
| 4 | கட்டண விபரம் பேருந்தில் காட்சிப்படுத்தாமை | | | | | |
| 5 | பயணிகள் சேவைக்கு ஏற்றதல்லாத வாகனத்தை சேவையில் ஈடுபடுத்தல் | | | | | |
| 6 | அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரை அவமதித்தல் | | | | | |
| 7 | பயணிகளுடன் பாரதூரமான வகையில் முரண்படுதல் | | | | | |
| 8 | காலாவதியான (ஒரு மாதத்திற்குள்) வழி அனுமதிப் பத்திரத்துடன் சேவையாற்றுதல். | எச்சரிக்கை செய்யப்படுவதுடன் ரூபா. 1,500.00 தண்டப்பணம் செலுத்தப்பட வேண்டும் | எச்சரிக்கை செய்யப் படுவதுடன் ரூபா. 3,000.00 தண்டப்பணம் செலுத்தப்பட வேண்டும் | பயணிகள் சேவை அனுமதிப் பத்திரத்தை இரத்து செய்தல் | | |
| 9 | நேர அட்டவணையைப் பின்பற்றாமை | | | | | |
| 10 | உரிய அதிகாரிகள் ஆவணங்களை பரிசோதனை செய்ய கோருமிடத்து அதனை மறுத்தல் | | | | | |
| 11 | குறித்த வழிக்கான அனுமதிப்பத்திரம் இன்றி அவ்வழியில் சேவையாற்றுதல் | | | | | |
| 12 | கட்டண விபரத்தினை விட கூடுதலான கட்டணம் அறவிடுதல் | | | | | |
| 13 | பதிவு செய்யாத சாரதி, நடத்துநர் சேவையாற்றுதல் | | | | | |
| 14 | வாகனத்தின் தகைமை மற்றும் சுத்தம் பேணாமை | | | | | |
| 15 | பயணிகளுடன் முரண்படுதல் | | | | | |
| 16 | அனுமதிக்கப்படாத வழியில் சேவையில் ஈடுபடுதல் | எச்சரிக்கை செய்யப்படுவதுடன் ரூபா. 500.00 தண்டப்பணம் செலுத்தப்பட வேண்டும் | எச்சரிக்கை செய்யப் படுவதுடன் ரூபா. 1,000.00 தண்டப்பணம் செலுத்தப்பட வேண்டும் | எச்சரிக்கை செய்யப்படுவதுடன் ரூபா. 2,500.00 தண்டப்பணம் செலுத்தப்பட வேண்டும் | எச்சரிக்கை செய்யப் படுவதுடன் ரூபா. 3,000.00 தண்டப்பணம் செலுத்தப்பட வேண்டும் | பயணிகள் சேவை அனுமதிப் பத்திரத்தை இரத்து செய்தல் |
| 17 | குறித்த வழியில் முடிவிடம் வரை சேவையாற்றாமை | | | | | |
| 18 | விசேட அனுமதிப்பத்திரம் பெறாது விசேட சேவையாற்றுதல் | | | | | |
| 19 | உரிய ஆவணங்களை வாகனத்தில் வைத்திருக்காமை | | | | | |
| 20 | ஆரம்ப இடம், முடிவிடம், வழியிலக்கம் வாகனத்தில் காட்சிப்படுத்தாமை | | | | | |
| 21 | அனுமதிக்கப்பட்ட இருக்கைகளுக்கு குறைவாக அல்லது கூடுதலான இருக்கைகளுடன் சேவையில் ஈடுபடுதல் | | | | | |
| 22 | மணி இல்லாமை அல்லது இயங்காமை | | | | | |
| 23 | வாகனத்தினுள்ளே புகைத்தல் விலக்கப்பட்டுள்ளது எனும் அறிவித்தல் இடப்படாமை | | | | | |
| 24 | மதகுருவுக்கு, அங்கவீனருக்கு, கர்ப்பிணித் தாய்மாருக்கு ஆசனங்கள் ஒதுக்கப்படாமை | | | | | |
| 25 | ஏனைய சிறு குற்றங்கள் | | | | | |
| 26 | அனுமதிக்கப்பட்ட பயணிகளிலும் பார்க்க அதிகூடியளவு பயணிகளை ஏற்றிச்செல்லல் | 1-3 பயணிக்கு ரூபா.500.00 4-6 பயணிக்கு ரூபா.1,000.00 6 பயணிக்கு மேல் பயணியொன்றுக்கு ரூபா.200.00 வீதம் | எச்சரிக்கை செய்யப்படு வதுடன் முதல் தடவை குற்றப் பணத்தின் ஒன்றரைமடங்கு | எச்சரிக்கை செய்யப்படு வதுடன் முதல் தடவை குற்றப் பணத்தின் இருமடங்கு | பயணிகள் சேவை அனுமதிப் பத்திரத்தை இரத்து செய்தல் | பயணிகள் சேவை அனுமதிப் பத்திரத்தை இரத்து செய்தல் |

5 - 588